# கட்டான தொகுதி தேர்தல் பின்போடப்பட்டது

JAFFNA COLLEGE ★ LIBRARY ★ UNDERGRADUATE
1970

Registered as a NewsPaper in Ceylon   விலை சதம 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் · ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 86
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் சித்திரை 25   ரபி. அவ். 1   வெள்ளிக்கிழமை   [8-5-70]

## வேட்பாளர் ஒருவர் காலமானார்

கோட்டை, வியாழன்
கட்டான தொகுதியில் சுயேச்சை அபேட்சகராய் போட்டியிடும் திரு. பெர்னண்டோபுள்ளே காலமாகிவிட்டார்.

இவரது மரணம் சம்பந்தமான செய்தி தேர்தல் கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் கமிஷனர் டயஸ் அபயசிங்கா மேற்படி தொகுதியின் தேர்தல் இம்மாதம் 27-ந்திகதி நடைபெற மாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

கட்டான தொகுதியின் தேர்தல் சம்பந்தமான ஏனைய விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என மேலும்தெரிவித்துள்ளார்.

வெலிமடைத் தொகுதி

## ஆட்சேப மனு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல்

கொழும்பு, வியா.
7-வது ஆட்சிமன்ற தேர்தல் நடைபெறுவதற்கு முன்னுகவே தேர்தல் ஆட்சேபமனுவொன்று இன்று கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பேர்ஸி சமரவீரா இத் தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்துளளார்.

கடந்த மாதம் 23-ம் திகதி இவரது தேர்தல் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பியதில் தவறிருப்பதாக வெலிமடை தேர்தல் அதிகாரி நிராகரித்ததை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்டில் ஆட்சேப மனுவை தாக்கல் செய்துள்ளார்.

முதலாவது விண்ணப்பதாரரான திரு ஆர். எம். பண்டார வெலிமடைத் தொகுதிக்குப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டாரென்று தேர்தல் அதிகாரி அறிவித்திருந்தது தெரிந்ததே.

திரு பேர்ஸி சமரவீராவின் ஆட்சேப மனுமீதான விசாரணை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (சி. பி. ஏ.)

### யாருடையது?

யாழ்ப்பாணம் திருநெல்வேலி, 117 பலாலி வீதியில் வசிக்கும் திரு. மு. கந்தையா என்பவர் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் 6-5-70 அன்று பிற்பகல் 4-30 மணியளவில் ஒரு காரின் உபரிப் பாகம் ஒன்று கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

தெஹிவளை படுகொலை:

# சதித் திட்டம் பொலிசாரின் கையில் சிக்கியுள்ளதாம்

'ஆட்சிமன்றத்தில்

## சிறுபான்மைத் தமிழர்குரல் ஒலிக்க வேண்டும்"

உடுப்பிட்டி, வியா.
"சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதில் நாம் ஓய்ந்து விடக்கூடாது. தொடர்ந்து போராடுவதன் மூலம்தான் எமது சமூகத்தவர்களின் உரிமைகளை நிலைநாட்ட முடியும். ஆட்சிமன்றத்திலும் எமது குரல் ஒலிக்க வேண்டும். அப்போதுதான் ஆட்சியாளர்கள் எமது கஷ்டங்களை உணர்ந்து எமக்காக உதவி புரிவர்."

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் முற்போக்கு இயக்க அபேட்சகராக உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு. எஸ். ஜே. சுந்தரம் இமையாணன் மட்டதுப்புறம் என்னுமிடத்தில்

### உலகின் மிகப் பழைய இந்துக் கோவில்

காட்மாண்டு, மே 7
உலகிலே மிகவும் பழமையான இந்துக்கோயிலொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் பீரட் நகருக்கு அருகே அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள இக்கோயில்தான் உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது என நேபாளப் புதைபொருளாராய்ச்சிப் பிரி

## கொலையாளிகளை மடக்குவதில் அதிகாரிகள் உறுதி

கொழும்பு, வியா.
கடந்த ஆறு மாதகாலமாக உருவாக்கப்பட்டுவந்த சதித்திட்டமொன்றின் ஓர் அம்சம்தான் தெஹிவளை பாலத்தில் செனட்டர் கே. எம். பி. ராஜரத்தினுவின் கார் மறிக்கப்பட்டு அவருடனிருந்த இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் என்று பொலிசார் கருதுகின்றனர்.

பிடித்துவிடமுடியுமென்றும் அதற்கான தகவல்கள் பலவும் கிடைத்துவிட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இக்கொலைக்குப் பாவிக்கப்பட்ட துப்பாக்கியைக் கைப்பற்றுவதும் விரைவில் கைகூடும் என்றுபொலிசார் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்

இச்சதித்திட்டம் சம்பந்தமாகப் பொலிசாருக்கு அநேக தடயங்களும் தகவல்களும் கிடைத்திருப்பதால் அனேகமாக அடுத்த இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் சம்பந்தப்பட்ட நபர்களை மடக்கிப் பிடிக்க முடியுமென்று பொலிஸ் மேலிடம் கருதுகின்றது.

தினத்தில் மாத்திரம் பாதுகையில் சுமார் 40 அல்லது 50 பேர்களைத் தாம் விசாரணை செய்ததாக கல்கிஸை உதவிப் பொலிஸ் சுப்பிரன்டன்ட் திரு. ஆர். எம். டி. அமரசேன கூறினார். இக்கொலைக்கான அடிப்படைக்காரணங்களுக்கான தகவல்கள் பொலிசார் கையில் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து சுமார் பத்துப் பேர் மீது பொலிசாருக்கு இறுக்கமான சந்தேகம் எழுந்துள்ளது. [illegible] 8 பேர் [illegible] சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது. இவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 110 வயது மூதாட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி
மீசாலை தெற்கைச் சேர்ந்த 110 வயது மூதாட்டி நேற்று முன்தினம்திடீர் மரணமுற்றார் கந்தர் சின்னப்பிள்ளை என்ற இம் மூதாட்டி இறக்கும்வரை உறுதியான பற்கள் உடையவராகவும் கண்பார்வையும் உடற்கட்டு முடையவராகவுமிருந்தாரென்றும் பிரதிதினமும் 5 மைல் வரை இடைவெளியுள்ள உறவினர் வீட்டுக்கும் ஆலயத்துக்கும் நடந்து வந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

### "உதவிசெய்து வாழவேண்டும்"

## இ. தொ. கா. எந்தக் கட்சியை ஆதரிக்கும்?

### 11-ம் திகதி முடிவு தெரியும்

கொழும்பு, திங்கள்
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வருகிற பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிப்பதென்ற முடிவு இம்மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கும் காங்கிரஸின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப் படவிருக்கிறது.

1965-ல் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தது. இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியையோ ஆதரிப்பதென்ற முடிவு விரைவில் முடிவுசெய்யப் படும்.

தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களான திரு எஸ். தொண்டமான், திரு வி. அண்ணாமலை ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் கடந்தமுறை நியமன எம். பிக்களாக நியமிக்கப்பட்டனர், திரு. ஜேசுதாசன் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் செனட்டராக நியமிக்கப்பட்டார்.

கடந்த 1-ம் திகதி கொழும்பில் நடைபெற்ற மே தினக் கொண்டாட்டங்களில் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஏ எம். டி. ராஜன் கலந்து கொண்டு பேசுகையில் தேசிய அரசாங்கத்தைப் பாராட்டிப்பேசியுள்ளதும்இங்கு குறிப்பிடத் தக்கது. (சி. பி. ஏ)

டங்களை உணர்ந்து எமக்காக உதவி புரிவர்.''

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் முற்போக்கு இயக்க அபேட்சகராக உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு. எஸ். ஜே. சுந்தரம் இமையாணன் மத்துப்புறம் என்னுமிடத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. அரசலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, கிளிநொச்சி வேட்பாளர் திரு. ஜெரோம் உட்பட வேறு பலரும் பேசினர்.

லொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் பிரட் நகருக்கு அருகே அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள இக்கோயில்தான் உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது என நேபாளப் புதைபொருளாராய்ச்சிப் பிரிவினர் கூறுகின்றார்கள்.

இக்கோயில் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுங்க வம்ச அரசர் காலத்தவையாக இருக்கலாமெனக் கருத்துத் தெரிவிகப்பட்டுள்ளது.

**எம். பி. ராஜரத்தினு வின் கார் மறிக்கப்பட்டு அவருடனிருந்த இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் என்று பொலிசார் கருதுகின்றனர்.**

இதில் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களைப் பொலிசாரால் விரைவில் கண்டு

இச்சதித்திட்டம் சம்பந்தமாகப் பொலிசாருக்கு அநேக தடயங்களும் தகவல்களும் கிடைத்திருப்பதால் அனேகமாக அடுத்த இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் சம்பந்தப்பட்ட நபர்களை மடக்கிவிட முடியுமென்று பொலிஸ் மேலிடம் கருதுகின்றது.

தெஹிவளை பாலத்தில் இடம்பெற்ற கொலைசம்பந்தமாகக் கடந்த போயா

கையில் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து சுமார் பத்துப்பேர் மீது பொலிசாருக்கு இறுக்கமான சந்தேகம் எழுந்துள்ளது. இவர்களில் 8 பேர் நேரடியாகவே சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. இவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கில் ரேஸ் சாம்பியன் என்று கருதப்படுகின்றதாம்

டுக்கும் ஆலயத்துக்கும் நடந்து வந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலில் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தது. இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியையோ ஆதரிப்பதென்ற முடிவு விரைவில் முடிவுசெய்யப்படும்.

தொழிலாளர் காங்கிரஸ் மிபில் நடைபெற்ற மேதினக் கொண்டாட்டங்களில் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த எம்.டி. ராஜன் கலந்து கொண்டு பேசுகையில் தேசிய அரசாங்கத்தைப் பாராட்டிப்பேசியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி. பி. ஏ)

# ‘கிலி கொள்ள வேண்டாம்’

## ஐ. ஜி. பி.

தேர்தல் நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டில் பல பாகங்களிலும் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் குறித்துக் கிலி கொள்ளவேண்டாம் என்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இந்தச் சம்பவங்கள் சற்று அச்சம் அளிப்பவையாக இருந்தாலும், கிலிகொள்ளுமளவுக்கு ஒன்றும் இல்லையென்றும் தேர்தல் சூடுபிடிப்பதையே இவை உணர்த்துவதாக அவர் கருதுகிறார்.

நாடு முழுவதும் விழிப்பான கண்காணிப்புகளுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இடம்பெறும் ஒவ்வொரு சம்பவத்தைப் பற்றியும் தாம் நேரடியாகத் தகவல் அறிவதற்கு ஏற்பாடு செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்

## “உதவிசெய்து வாழவேண்டும்”

சுழிபுரம், வியாழன்

‘'திருவள்ளுவர், ஔவையார், மகாகவி பாரதியார் போன்ற பெரும் புலவர்கள் சாதியென்று ஒன்று இல்லை இவை எந்த ஆகம விதிகளிலும் இல்லை என்பதை அறுதியிட்டு தெரிவித்துள்ளனர். உலகத்தில் வாழும் மனித இனம் முதல் மிருக உயிரினம் வரை ஒன்றையொன்று அடக்கியும் அழிக்கவும்தான் விரும்புகின்றன. இந்தநிலைமாறி எல்லோரும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாக வாழவும் சகோதரத்துவத்துடன் மிளிரவும் வழிகாணவேண்டும்.''

இவ்வாறு தொல்புரம் பாணுவெட்டி காந்திக்கிராம நிறுவனத்தினரால் கொட்டியாவத்தை கலைவாணி சனசமூக வாசிகசாலையில் நிறுவப்பட்டுள்ள தையல் நிலையத்தை திறந்துவைத்து பேசிய வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு சுழிபுரம் கிராமசபை தலைவர் திரு. சு. கந்தசாமி தலைமை வகித்தார். திரு. கே. என். நவரத்தினம் ஆர். டி. ஓ. பேசுகையில் எம்மிடையேயுள்ள சகல பூசல்களையும் மறந்து நாம் ஓர் இலட்சியப் பாதையில் செல்ல வேண்டியுள்ளோம், கடமையைச்செய்யவும் அதேவேளையில் எமது உரிமையைக் காக்கவும் நாம் திடங்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆட்சிமன்றத்தில்

# சம அந்தஸ்து பற்றி ஜி. ஜி. பேசியிருக்கிறாரா?

## அமிர்தலிங்க கேட்கிறார்

அராலி, வியாழன்

‘'சிங்களத்தோடு தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து இன்று கோரி நிற்பது எமது கட்சி ஒன்றுதான் என வடக்கில் கூறிவரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் ஆட்சிமன்றத்தில் ஒரு முறையாவது கூறினாரா? மொழிப் பிரச்னையைச் சகல கட்சி மகாநாட்டில் பேசி முடிவு செய்யவேண்டுமென இன்று தேர்தல் சமயத்தில் கூறும் இத்தலைவர் 1966-ல்பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா போன்றவர்களுடன் வட்டமேசை மகாநாடு நடத்த முடியாதென ஆட்சிமன்றத்தில் கூறவில்லையா?''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அராலி கிழக்கில் நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசினார். கூட்டத்திற்குதிரு.ச. தியாகராசா தலைமைவகித்தார்.

கோப்பாய்த்தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உட்பட வேறு பலரும் பேசினர்.

# கசிப்பு வேட்டையில் 13-வயதுசிறுவன்சிக்கினான்

யாழ்ப்பாணம், வெள்ளிமணன் செல்வராசா, முத்து

மட்டுவில் தெற்கில் பொலிசார் நடாத்திய கசிப்பு வேட்டையில் 13 வயது சிறுவன் உட்பட நால்வர் கைதாகினர். 384 ரூம் கசிப்பையும், கசிப்பு தயாரிப்பதற்காகப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சாதனங்களையும் சாவகச்சேரிப் பொலிசார் கைப்பற்றினர்.

சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். கதிர்காமநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி நேற்று இவற்றை கைப்பற்றியது.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி கே. விக்னராசா முன்னிலையில் கைது செய்யப்பட்ட செல்வன் மணியன், லடசு தர்மலிங்கம், செல்வயோகரத்தினம் ஆகிய நால்வரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

1-ம் எதிரி சார்பில் புறக்டர் சி. பாலகிருஷ்ணனும் 2-ம், 3-ம், 4-ம் எதிரிகள் சார்பில் புறக்டர் என் அருணசலமும் ஆஜரானார்கள்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட 384 ரூம் கசிப்பும் சாதனங்களும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

மாஜிஸ்டிரேட் 1-ம் எதிரிக்கு 500 ரூபா அபராதம் விதித்தது. மற்றும் 3 எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்கள்.

(கொடி, மடடு. நிருபர்)

## தீப்பெட்டி தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை, வியா

யாழ்ப்பாணப்பகுதியில் தீப்பெட்டிக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பாவனையாளருக்குப் போதியதான தீப்பெட்டி விநியோகம் செய்யப்படாமையால் கூடிய விலை கொடுத்து தீப்பெட்டி வாங்க நிர்ப்பந்தம்ஏற்பட்டுள்ளது. தரம் குறைந்த தீப்பெட்டிகள் கூட க்கிடைப்பதில்லையென பாவனையாளர் தெரிவிக்கின்றன.

அல்வாயில்துணிகரச்சம்பவம்

## டைனமைட் மூலம் கதவுடைத்து கோவிலில் திருட்டு

உடுப்பிட்டி, வியாழன்

ஆலயக் கதவு ‘டைனமைட்’ வெடி மூலம் தகர்க்கப்பட்டுப் பயங்கரக் கொள்ளை நடந்து உள்ளது. அல்வாய் மாலிசந்திப்பிள்ளையார் ஆலயத்திலேயே இத் துணிகரத் திருட்டு நடந்தது.

ஆலயத்தின் தெற்கு வாசல் கதவை டைனமைட் வைத்து உடைத்துக் கோவிலின் உள்ளே புகுந்த திருடர்கள் விநாயகர் விக்கிரகத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த நான்கு தங்கப்பவுண் எடையுள்ள தகட்டை கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம். கடந்த 2ம் திகதி நள்ளிரவிலேயே இப் பயங்கரத் திருட்டுச் சம்பவம் நடந்ததாம்.

இதனை அடுத்து வதிரி உள்ளியனொல்லை அம்மன் ஆலயத்தினுள்ளும் கதவைஉடைத்து உள்ளே புகுந்த திருடர் கோஷ்டி பெறுமதியான பொருட்கள் ஏதும் அகப்படாததால் அம்மன் சிலையைச் சாய்த்துவிட்டுச் சென்றுள்ளதாம்.

கரணவாய் தெற்கு முதலைக்குளி முருகையாகோவில் கதவும் நள்ளிரவில் உடைக்கப்பட்டிருந்ததாகவும், திருட்டு எதுவும் நடைபெறவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு கிழமைகளுக்குள் இப்பகுதியில் 7 கோவில்களில் திருட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும், ஒரு திட்டமிட்ட கோஷ்டியே ஆலயக் கதவுகளை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், நம்பப்படுகிறது இக்கோஷ்டியின் நோக்கம் கடவுள் இல்லை என்பதை நிரூபிப்பதாக இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.

இத்திருட்டுக்கள் சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

கோவில்களில் நடைபெறும் இவ்வித கதவுடைப்பு, திருட்டுச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக இந்து இளைஞர்களைக் கொண்ட தொண்டர் படை இரவு முழுவதும் ஆலயங்களையும், ஆலயத்திற்கு அருகில் நடமாடுவோர்களையும் கண்காணித்து வரும்.

## இளைஞர்கள் சிரமதானம்

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லி[illegible]கமூர்த்தி ஆலய [illegible]தியிலிருக்கும் மட[illegible]நெல்லியடி வாலிபர்[illegible]த்தைச் சேர்ந்த இ[illegible]நர்கள்சிரமதானம் மூலம் திருத்திக் கூரையை வேய்ந்து புனரமைப்புச் செய்தனர்.

இந்த மடத்தின் ஒரு பகுதியை வாசிகசாலையாக்குவதென்றும், அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதென்றும் நெல்லியடி வாலிபர்சங்கம் தீர்மானித்துள்ளது.

ஐ தே கட்சியின்

## ‘நிலங்களைக் கைப்பற்றுவோம்’

தம்பதேனியா, வியா

‘எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருமதி பண்டாரநாயக்கா அதிகாரத்துக்கு வந்ததும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கும் முதலாளிகளுக்கு நல்ல பாடம் படிப்பிப்போம். 1000 ஏக்கருக்கு மேல் காணி வைத்திருக்கும் பணக்காரர்களிடமிருந்து அவர்களுக்கு 100 ஏக்கர் மாத்திரம் விட்டுவிட்டு மிகுதியை எடுத்து நிலமற்ற வறிய மக்களுக்கு வழங்குவோம். மேலும் நிலம் தேவையாகவிருந்தால்இந்த 100 ஏக்கரிலும் 50 ஏக்கரை எடுத்துவிடுவோம்.’

தம்பதேனியாவில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய வலகும்பர சிலறன்ஸிதேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மார்க்ஸீயவாதிகள் எந்த ஒரு மதத்தையும் எதிர்க்கவில்லையெனவும் அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ஏச். எல். பிரேமதாசா, சோமபாலா, ரணதுங்கா, நந்தவீரா உட்படப் பலர் உரையாற்றினர்.

## இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6-00 — 7-00 மணி வரை வித்துவான் திரு. கே. கே. நடராஜன் அவர்களின் பெரியபுராணத் தொடரின் ‘முத்துப்பந்தர்’ என்ற பொருள்பற்றிய பிரசங்கமும், சந்தன அலங்கார காட்சியும், சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

## விமான விபத்து 18பேர் பலி

மணிலா, மே 7.

மணிலாவுக்கு அண்மையில் இன்று நடைபெற்ற விமான விபத்து ஒன்றில் 18பேர் பலியாகினர்.

சடலங்கள் யாவும் மீட்கப்பட்டுவிட்டன என்றும், அவை எரிந்து கிடக்கக் காணப்பட்டன வென்றும் அறிவிக்கப்பட்டது.

---

கொங்கொங், மே. 7

பதவி நீக்கம் செய்யப்பட்ட கம்போடிய தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக் அமைத்துள்ள அரசாங்கத்தை அல்பேனியா, கியூபா. யூகோஸ்லாவியா, ஈரான் ஆகியவை உட்பட ஆறு நாடுகள் அங்கீகரித்துள்ளன.

“மேதினம் கொண்டாட

# முதலாளித்துவக் கட்சிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது?”

உடுவில். வியாழன்

‘'பஸ்சேவை. துறைமுகம், பாடசாலை போன்றவற்றின் தேசியமயம், நெற்காணி மசோதா போன்ற தொழிலாளவர்க்கத்தின் சோஷலிச அடிப்படையிலான மசோதாக்களை எதிர்த்தவர்கள் எல்லோரும் மேதினம் கொண்டாடுகிறார்கள். தமிழ்ப்பெரும்கட்சிகள், சிங்கள முதலாளித்துவக சிகள் எல்லாம் மேதினம் கொண்டாட என்ன உரிமை இருக்கிறது, முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகளான இவர்கள் தமிழ்ப்பெண்ணினத்துக்கோ பட்டதாரிஇளைஞர்களுக்கோ அல்லது ஏழை விவசாயிகளுக்கோ என்ன நன்மைகளைச் செய்துவிட்டு மேதினம் கொண்டாடுகிறார்கள் இவர்கள் கொண்டாட்டமெல்லாம் தம் சுயநலத்திற்காகவே.''

உடுவில் தொகுதி வாலிப முன்னணியினர் கொண்டாடிய மேதினவிழாவில் பேசிய பல்கலைக் கழக மாணவரான திரு. இராகவன் கூறினார். உடுவில் தொகுதி சுயேட்சை வேட்பாளர் திரு. குமாரசாமி விநோதன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

உடுவில் கிராம சபைத் திறந்தவெளியரங்கில் இவர்களின் மேதினக் கூட்டம் நடைபெற்றது. சண்டிலிப்பாயிலிருந்து சங்குவேலி உடுவில், கந்தரோடை, சுன்னாகம் வீதிவழியாக [illegible]லிப முன்னணியினரின் [illegible]தின ஊர்வலம் உடுவி[illegible]றந்த வெளிமைதானத்[illegible] வந்தடைந்தது.

கடந்த வருடம் வெசாக் தினமும் மேதினமும் ஒரே நாளில் வந்தபோது உரிய நாளில் மேதினம் கொண்டாடிய சீன சார்புக் கம்யூனிஸ்ட்கட்சியை திரு. விநோதன் தமது தலைமையுரையில் பாராட்டினார்.

திரு. தா. சண்முகநாதன் பேசுகையில், ஊசி முதல் கொண்டு அந்நியநாட்டினரிடம் கையேந்தி நிற்கவைத்துள்ள நமது அரசாங்கமும் அதன் தலைவர்களும் சுதந்திரதினம், தொழிலாளர்தினம் எனக்கொண்டாட்டங்கள் நடத்துவது வேடிக்கையாயிருக்கிறதென்றார்.

திரு சி. சுசிதர் பேசுகையில், ஒரு தொழிலாளிக்குத்தான் இன்னொரு தொழிலாளியின் கஷ்டம் தெரியுமென்றும், முதலாளியைத் தனது வழிகாட்டியாக வைத்துக்கொண்டு தொழிலாளிகள் முன்னேறமுடியாதென்றும் சொன்னார். திரு. ஜெகநாதனும் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கி. ச. தலைவரால் ரூபா 5000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்து இலுப்பையடி ரோட்டுக்கு 26-5-70-ந் திகதி காலை 11 மணி வரை பதிவு செய்த கேள்விகள் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரம் பெறுவோர் கேள்விக்காசு ரூபா 50/-ம் பத்திரக்காசு ரூபா 10/-ம் 25-5-70க்கு முன் சட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். பத்திரக்காசு ரூபா 10/-ம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

விபரங்கள் யாவும் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளரினதும், இச் சபையினதும் காரியாலயங்களில் வேலை நேரங்களில் அறியலாம்.

சி. சிதம்பரப்பிள்ளை,
கி. ச. தலைவர்,
புதுக்குடியிருப்பு.
6-5-70. 2253

## வரி விளம்பரம்

### வகுப்புக்கள்

'பாமசிஸ்ற்' பரீட்சைக்கு (External Pharmacist Examination) வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விக்னேஸ்வரன், 7, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2119

### விற்பனைக்கு

35 பரப்பு தோட்டக் காணி வற்ருக்கிணறு உரும்பராய் வடக்கு புறக்டர் தனபாலசிங்கத்தை சந்திக்கவும். 2203

காணி:

பீச்ரோட்டில், பருத்தித்துறை தபாற்கந்தோருக்கு அருகாமையில் உள்ள 28 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். க. சிறிசிவலிங்கம், முதலாம் கட்டை, பருத்தித்துறை. 2208

### FOR SALE

Poultry

SYKES-2 1/2 months old Pullets- N. Sathananthan, 120/2, Arasady Road, Kandarmadam, Jaffna. 2209

# வேட்பாளர் அறிமுகம்

### டாக்டர் இ எம் வி நாகநாதன்
(தமிழரசு)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மிக முக்கிய உறுப்பினராகவுள்ளவர் திரு. இ.எம்.வி. நாக நாதன். திடமான போக்கும், உற்சாகமும் கொண்டவரைக் கட்சியினர் 'இரும்பு மனிதன்' நாகநாதன் என்று அடைமொழி கொடுத்து அழைத்து வருகின்றனர்.

1906ம் ஆண்டு திருவாளர் முருகேசு விஜயரத்தினம் அவர்களின் மகனுகப் பிறந்தவர் திரு இ.எம்.வி. நாகநாதன.

மருத்துவராக இருந்து மாத வருமானம் 4,000க்கு மேல் பெற்றுவந்த அவர் தமிழ் மக்களின் நலன் கருதி அரசியலில் ஈடுபட்டார். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் ஒரு மூதவை உறுப்பினராக இருந்து, பின் தமிழரசை அமைப்பதற்கு உதவியாக இருந்தார். தமிழ்க்காங்கிரஸ் மூதவை உறுப்பினராக இருந்த போதும், சிங்கக் கொடியை எதிர்த்தும், சோல்பரித் திட்டத்தை எதிர்த்தும், சமஷ்டி அரசியல் அமைப்பை ஆதரித்தும் செனட் சபையில் ஆணித்தரமாக பேசினுர். லண்டனில் மாணவனுக இருந்தபோது

## நல்லூர்த் தொகுதி

சிங்கப்பூர் தளத்திலிருந்து பிரித்தானிய படைகள் வாபஸ் பெறவேண்டுமென்று வின்சன்ட் சேச்சில் உடன் கடிதப் போர் நடத்தியதை அன்றைய பத்திரிகைகள் சான்று பகரும். வெளி நாடொன்றில் சுதந்திரப் போராட்டம் நடாத்திய போது அதில் ஈடு பட்டு எதிரிகளின் குண்டடிக்கு இலக்கானவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்டு ஏற்பட்ட காயம் இன்று அடையாளச் சின்னமாக அவருடைய தொடையில் இருக்கின்றது.

அதேபோல் இலங்கை அரசியலில் ஈடு பட்ட பின்பும், இலங்கைவாழ்தமிழ்ப்பேசும் மக்களுக்காக, குண்டாந்தடிக்கு இலக்கானவர்இவர். விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்டபடியால். இன்று முற்றுக மருத்துவத் தொழிலை கைவிட்டு விட்டவர், இன்று தமிழினத்தின் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், வாழ்வை அர்ப்பணிக்க முன்வந்திருக்கிறுர்.

'தன் உயிர் உள்ள வரை தமிழரசுக்கட்சியும், தமிழினமும் எமது தமிழ்ப் பேசும் மக்களுக்காக எந்த எந்த போராட்டத்தை நடத்துமோ அவற்றுக் கெல்லாம் என் உடலையும் தியாகம் செய்வேன்' என்று இவர் உணர்ச்சியுடன் கூறி வருகிறுர். ஒற்றை ஆட்சி அமைப்பு தமிழினத்திற்கு என்றுமே விமோசனம் அளிக்காது என்பது இவரது இரும்புக் கொள்கையாகும்.

0 0 0

### திரு. சி. அருளம்பலம்
(தமிழ்க்காங்கிரஸ்)



அங்கம்வகிக்கும்இவர் அதன் செயலாளருமாகஇருந்திருக்கிறுர்.

கொக்குவில் கிராமசபையில் 14 ஆண்டுகளாக தலைவர் பதவியை வகித்தார்.

சைவசமய வளர்ச்சிக்காக அரும்பெரும் பாடுபட்டுவருபவர். யாழ்ப்பாணத்தில்இந்துப்பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கையில் இவருக்கு முக்கிய பங்குண்டு.

ஒற்றையாட்சியின் மூலம் தான் தமிழ்மக்களுக்கு உரிமைகள் சலுகைகள் கிடைக்கும். பொருளாதாரம் அபிவிருத்தியடையுமென்பதில் திடமான நம்பிக்கையுடையவர்.

தொகுதியில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காகவும், தமிழர் சிங்களவர்என்ற பேதமின்றி இனத்தை, மதத்தை ஒற்றுமைப்படுத்துவதற்காகவும் தேர்தலில் போட்டியிடுகின்றேன் என்று இவர் கூறுகிறுர். இம்முறை தமக்கு நிச்சயம் வெற்றிகிடைக்குமென்று நம்பிக்கை கொண்டிருக்கிறுர்.

0 0 0

### திரு. அம்பலவாணர் இரத்தினம்
(சுயேச்சை, சுயாட்சிகழகம்)



திரு. அ. இரத்தினம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், யாழ் / இந்துக்கல்லூரியிலும் கல்விபயின்று, பின் லண்டன் சென்று பீ.ஏ.முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். இவர் சிவில்சேவையாளராவார்.

அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் வேலை செய்தார். 1952-ம் ஆண்டில் காணி உரிமையாக்கும் அதிகாரி பதவியை அடைந்தார். இலங்கை சர்வகலாசாலை விரிவுரையாளராக கடமையாற்றி மக்களிடையே அன்பையும், ஆதரவையும் பெற்றவர். சிலகாலம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரித்தலைவராக கடமையாற்றினுர்.

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சோஷலிஸமே விமோசனம் அளிக்குமென்ற நம்பிக்கையுடையவர். ஆகையினுலேயே சமசமாஜக்கட்சியில் போட்டியிட முன்வந்துள்ளேன் என்கிறுர்.

0 0 0

### ச. ஸ்ரீநிவாசன்
(சுயேச்சை வேட்பாளர்)



கொககுவிலை பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர் சதாசிவம் ஸ்ரீநிவாசன் சென்ற பொதுத் தேர்தலில் (1965) வவனியாத் தொகுதியில் சுயேச்சை வர்தியாக போட்டியிட முன்வந்தார்

கடந்த பல ஆண்டுகளாக காரியாதிகாரியாக கோப்பாய், வவனியா போன்ற இடங்களில் கடமையாற்றிய இவர் இளைப்பாறியவர் பின்னர் சட்டக் கல்லூரியில் நியாயவாதிப்பட்டம் பெற்றுர்.

"சிங்கள மக்களுக்கு சிங்களம் ஆட்சி மொழியாயிருப்பதுபோல் தமிழ் மக்களுக்கு தமிழை ஆட்சிமொழியாக்குவேன். சிங்கள மக்கள் பௌத்தத்தைப் பாதுகாப்பதுபோல் தமிழ் மக்களுக்குச் சைவத்தைப் பாதுகாப்பேன். தமிழ்ப்பகுதிகளைத் தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பேன். கச்சேரி ஆட்சி ஒழிக்கப்பட்டு மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக்கூடிய அதிகாரங்கள் உள்ள மக்கள் சபைகள் தாபிக்கவேண்டும். வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட்டு வறுமை நீங்கி எல்லோடும் இன்புற்று வாழ வகைசெய்வேன். இதுவே இவரது உணர்ச்சி மிகுந்த இலட்சியமாகும். தமிழ் இலக்கியம், தமிழ் இசை தமிழ் நாடகம் இவைகளைப்பேணி வளர்க்கும்நோக்கம் உடையவர் இவர்.

தெருவெல்லாம் தமிழ் முழங்கச் செய்யவேண்டும்; உருவெல்லாம் தமிழ் உருவாய் மாறவேண்டும்; மூச்செல்லாம் தமிழ்மூச்சாய் வளரவேண்டும்; பேச்செல்லாம் தமிழ் பேச்சாய் திகழ வேண்டும்.

இக்கதை மூலம் தனது இலட்சியத்தைப்பரப்புகிறுர் இவர்.

0 0 0

### செ தனபாலசிங்கம்
(சுயேச்சை)



முன்னுளில் ஜெயமென்று தொழிலாளர்களினுல் அன்பாக அழைக்கப்பட்டுவந்த திரு. தருமகுலசிங்கம் அவர்களின் சகோதரரே திரு. தனபாலசிங்கம்.

1928-ம் ஆண்டு நியாய துரந்தரராக பதவிபெற்றவர். பின்னர் 1950-ம் ஆண்டில் நியாயவாதியாக சட்டக்கல்லூரியில் பயின்று வெளியேறினுர்.

1932-ம் ஆண்டு தொடக்கம் 1956-ம் ஆண்டுவரை பரமேஸ்வராக் கல்லூரியின் அதிகாரம் வாய்ந்த முகாமையாளராகக் கடமையாற்றியவர். 1954-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரை மாவட்ட நீதிபதியாக நீர்கொழும்பு, கம்பளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

அகில இலங்கை இந்து சமய பரிபாலனசபை, அகில இலங்கை சமய காங்கிரஸ் திவ்விய சீவன சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவராக விளங்கும் இவர் மக்கள் சேவையே மாபெரும் சேவையென்ற கருத்துடையவர்.

அரசாங்கக் கேள்விகள்
நீர்ப்பாசனத் திணைக்களம்
என் 1692 - யாழ்ப்பாண உப பிரிவிலுள்ள கனகாம்பிகைகுளத்தின் கீழ் இடதுகரை பிரதான வாய்க்கால்கள் வெட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 8-5-70 திகதியிட்ட இலங்கை அரசாங்க வர்த்தமான பத்திரிகையின் பகுதி-1 தொகுதி 11 பார்க்கவும்.
GP 2748

ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 3 காட்சிகள் கடைசி வாரம் சிவாஜி ஜி.வரலக்ஷ்மி - நம்பியார் நடித்த
ஹரிச்சந்திரா

## சங்காபிஷேகம்

புத்தூர், வியாழன் ஊரெழு கிளானைப்பதி பார்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தில் சென்ற வாரம் மஹேசுர பூசையும், மஹாசங்காபிஷேகமும் ஊரெழு மக்களால் சிறப்பாக நடாத்திவைக்கப்பட்டன.

## மட்டக்களப்பில் யாழ். வீரரின் அபாரத்துடுப்படி

யாழ்ப்பாணம், வெள்ளி வட்டுக்கோட்டை "ஓல் கோல்ஸ்" விளையாட்டுக் கழக கிரிகெட் கோஷ்டிக்கும், மட்டக்களப்பு பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் மட்டக்களப்பு சென் மைக்கல்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு பாடசாலைக்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து ஆக 68 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. எஸ். சிவசோதி திறமையாகப் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் யே வி போல், 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

'ஓல்கோல்ஸ்' கழகம் முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 200 ஓட்டங்களைப் பெற்றதும் தமது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் எஸ் டி குலநாதன், அபாரமாய் துடுப்பெடுத்தாடி ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றுர். இவர் 110 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டமிழந்தார். எம். சூடாமணி 30 ஓட்டங்களைப் பெற்றுர்.

மட்டக்களப்பு பாடசாலை தெரிவுக்கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்டதினுல் ஆட்டம் முற்றுக கைவிடப்பட்டது.

'ஓல்கோல்ஸ்' கழகத்துக்கு வீரர் ரி எஸ் சண்முகாவும் மட்டக்களப்பு பாடசாலை தெரிவுக் கோஷ்டிக்கு வீரர் எஸ் விஜயரட்ணமும் தலைமைதாங்கினுர்கள்

(தே. நி)

## யாழ். கனிஷ்ட தொழில்நுட்ப கல்லூரிபரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி கடந்த வருட பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம் வருமாறு:

குழாய் ஒட்டல் ஒருவருடப் பகுதிநேர மாலைப் போதனையினம் (தமிழ்)

பெறுபேறு அட்டவணை ஆகஸ்ட் 1969.

பெயர்கள்

கே. ஆறுமுகம், ஈ கந்தசாமி, எஸ் செல்வறட்ண்ம், எஸ். செல்வராசா, கே துரைசிங்கம், எஸ் பத்மநாதன், எஸ். மகேஸ்வரன்.

**மின்கம்பி இணைத்தல்**

ஒரு வருட பகுதிநேர மாலைப் போதனையினம்) (தமிழ்) வை சிவலிங்கம்.

**மோட்டார் பொறியியககம்-2**

இருவருட முழுநேரப் போதனையினம்) (தமிழ்)

எம் சப்பாணிப்பிள்ளை, எஸ் தண்டாயுதபாணி, எஸ் தளையசிங்கம், எஸ் பாலறட்ணம், கே. பாஸ்கரநாதன், எம் பாஜகரன். எஸ் முத்துலிங்கம், கே ஜெயராஜா, கே ஜெயபாலறட்ணம்.

**உலோக வேலை 2**

(இருவருட முழுநேரப் போதனையினம்) (தமிழ்)

எம் எச் அன்வர் பாச்சா, எஸ் இக்னேசியஸ், எம். கருணுகரன், எஸ் கிச்னர், கே சத்தியமூர்த்தி, கே செல்வரட்ணம், ஏ மரியதாஸ், எஸ் விமலதாஸ், ஏ அலெக்சாண்டர்.

**மர வேலை 2**

1. கே சந்திரறட்ணம், (இருவருட முழுநேரப் போகனையினம்) (தமிழ்)

**மின்கம்பி இணைத்தல் 2**

(இருவருட முழுநேரப் போதனையினம்) (தமிழ்)

வி அரியபுத்திரன், ஏ ஆறுமுகசாமி, ரி சிவஞானந்த வடிவேல், ஐ திருச்செல்வம், வி துரைசாமி, பி துரைசிங்கம், எம் மகாதேவன், ஏ மாசிலாமணி.

—

## பேச்சுப்போட்டி

சுழிபுரம், வியாழன் சுழிபுரம் கிராம சபை எல்லைக்குட்பட்டவர்களுக்கான பேச்சுப்போட்டியொன்றை வழக்கம்பறை தமிழ்மன்றத்தினர் நடாத்த முடிவுசெய்துள்ளனர்.

பதினைந்து வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகளே இதிற் கலந்துகொள்ளலாம். 28-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120/2. Arasady Road, Kandarmadam, Jaffna. 2209

பகுதி-1 தொகுதி 11 பார்க்கவும். GP 2748


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

கடைசி வாரம் சிவாஜி ஜி.வரலக்ஷ்மி - நம்பியார் நடித்த

**ஹரிச்சந்திரா**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி, கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த

**திருடன்**

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி மற்றும் பலர் நடித்த

**தங்கச் சுரங்கம்**

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 86-வது தினம்

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்




**சிவாஜிகணேசன் - பத்மினி**

பாலையா, நாகேஷ், நம்பியார் மற்றும் பலர் நடித்த

**தில்லானா மோகனம்பாள**

வெற்றிகரமான 2வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ் இன்னும் பலர் நடித்த

பி. நாகிரெட்டி அளிக்கும்

**நம் நாடு**

(ஈஸ்ட்மென் கலர்




கொக்குவிலை பிறப்பிடமாகக்கொண்ட திருவாளர் சி. அருளம்பலம் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவர்.

நல்லூர்த் தொகுதியின் ஒரு பகுதி கோப்பாய்த் தொகுதிக்குள் அடங்கியிருந்த 1952-ம் ஆண்டில் தமிழ்காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டவர். 1956-ம்ஆண்டு தமிழ்காங்கிரஸின் சார்பில் கோப்பாயில் போட்டியிட்டவர். அதன்பின் கோப்பாய்தொகுதியை இரண்டாகப் பிரித்தபோது நல்லூர்தொகுதியில் மீண்டும் தமிழ்காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டார். இப்போது இவர் ஆறாவது தடவையாக ஆட்சி மன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுகிறார். அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியில் பல்லாண்டுகளாக


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி: 6-30,10-00

பிரிபோயா.போயா 2-30 மணி

சிவாஜி - சாவித்திரி நடித்த

**கைகொடுத்த தெய்வம்**

**ஸ்ரீ காலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30-10-00 மணி

போயா, பிரிபோயா 2-30

ஜெமினி கணேசன் நடித்த

**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**

**REGAL** JAFFNA

Daily

4-45, 7 & 9-45 p.m.

Omar Sharif.

Francoise Dorleac

in

GENGHIS KHAN

(Technicolour)

**MANOHARA**

JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m

Prepoya, Poya 4 shows

Clint East wood

&

Susan Clark

in

COOGAN'S BLUFF

(Adults only)


கல்விபயின்று, பின் லண்டன் சென்று பீ.ஏ.முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். இவர் சிவில்சேவையாளராவார்.

அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் வேலை செய்தார். 1952-ம்ஆண்டில் காணி உரிமைபார்க்கும் அதிகாரி பதவியை அடைந்தார். 1954ல் இருந்து 1958 வரையும் நுவரேலியாப்பகுதியில் அரசாங்க அதிபராக இருந்தார். 1959ல் இருந்து 1962 வரையும் சுங்கப்பகுதி இலாகாவில் பொறுப்புவாய்ந்த மேலதிகாரியாக இருந்தார். 62ம்ஆண்டு கப்பல் கொம்பனியொன்றில் வேதனம் பெருமல்சேவையாற்றினர். இன்று தனக்குசொந்தமான பல பொருளாதார அபிவிருத்தி சேவைகளைச் செய்து வருகிறார்.

47ம் ஆண்டு வெள்ளப் பெருக்கின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை அறிவதற்காக பொலநறுவையிலிருந்து திருகோணமலைவரையும் நடந்து சென்றவர் இவர். அரசாங்க அதிபராக இருந்தநேரத்தில் மாத்தளை பகுதியில் உள்ள 'மல்காவ' என்ற பகுதியில் உள்ள ரொடியா இனத்தவருடன் பழகி அவர்களுடைய கிராமத்தில்உள்ள பாழடைந்தகிணறுகளைத்திருத்திசிரமதானம் மூலம் பாதைகளை வெட்டி அந்தக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு முன்நின்று உழைத்தார். 1958ம் ஆண்டு கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தார்.

பல நாடுகளுக்கும் சென்று கைத்தொழில் அபிவிருத்திகளை எல்லாம் பார்வையிட்டுள்ளார் இவர். எமது நாட்டின் பொருளாதாரத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க வேண்டுமென்ற தீவிர எண்ணம் கொண்டவர்.

இன்று சுய ஆட்சியினுல் தமிழினத்தின் இன்னல்களை நீக்கலாம் என்று முடிவு கொண்டுள்ளார். இதனுலேயே சுய ஆட்சிக் கழகத்தின் வேட்பாளராக நல்லூர் தொகுதியில் போட்டியிட முன் வந்துள்ளார்.

0 0 0

**திரு. வ. சச்சிதானந்தம்**
(ல. ச. ச. க.)

இளமைப் பருவத்திலேயே உயர்கல்வி பெற்ற இவர் ஒற்றையாட்சியிலேயோ அன்றி சமஷ்டி ஆட்சியிலேயோ இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் நன்மையடைய மாட்டார்கள் என்ற எண்ணத்தை கொண்டவர்.

இவர் லண்டன் பி. எஸ். சி; ஒணஸ் முதலாம் பிரிவில் சித்தியடைந்தவர் இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பிலிருந்து இளைப்பாறியவர். சிலகாலம்

தாபிக்கவேண்டும். வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட்டு வறுமை நீங்கி எல்லோரும் இன்புற்று வாழ வகைசெய்வேன். இதுவே இவரது உணர்ச்சி மிகுந்த இலட்சியமாகும். தமிழ் இலக்கியம், தமிழ் இசை

பார்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தில் சென்ற வாரம் மஹேசுர பூசையும், மஹாசங்காபிஷேகமும் ஊரெழு மக்களால் சிறப்பாக நடாத்திவைக்கப்பட்டன.

ஜெயராஜா, கே ஜெயபால நட்ணம்.

உலோக வேலை 2 (இருவருட முழுநேரப் போதனையினம்) (தமிழ்)

எம் எச் அன்வர் பாச்சா, எஸ் இக்னேசியஸ், எம்.

இதிற் கலந்துகொள்ளலாம். 28-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.


# இதோ!

உங்கள் பயிர்களின் ஆரோக்கியத்தைப் பேணும் பவர்ஸ் விவசாய ரசாயனப் பொருட்கள்!



**எக்கடொகஸ் 50**

உடனுக்குடன் செயலாற்றும் வன்மையும் நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் தன்மையும் கொண்ட சக்தி மிக்க இக் கிருமி நாசினி நெற்பயிர், புகையிலை, மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் காய்கறிச் செடிகளைத் தாக்கும் சகல கிருமிப் பீடைகளையும் அழிக்க வல்லது.

**டீனேல் 25**

நெற்பயிர், மரக்கறி, பழ மரங்கள் முதலியவற்றின் இலைகளை உண்ணும் மயிர் கொட்டிகளை அழிக்கக் கூடிய கிருமி நாசினி.

**தியோவிற**

சிற்றுண்ணி, ஏப்பிட்டுகள் (அழுக்கணவன்), திறிப்ஸ் (பனிப்பூச்சி) போன்ற சிறு பூச்சி இனங்களை ஒழிக்க வல்ல இந்தக் காளான் நாசினியை டீனேல் 25 உடன் கலந்து உபயோகிக்கவும். மிளகாய்ச் செடியில் உண்டாகும் குருமன் நோயை அறவே அழிக்கவல்லது என யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரியினுல் சிபார்சு செய்யப்பட்டது.

**டைமெகுரோன 100**

தாவரத்தில் ஊடுருவக்கூடிய இக் கிருமிநாசினியை செடியின் எப்பாகத்திலும் தெளிக்கலாம். அரிக்கும், உறிஞ்சும், உண்ணும் பூச்சிகள், தண்டு கோதிகள் போன்றனவற்றை அழிக்க அதி சக்தி வாய்ந்தது.

**மிலடொகஸ் 50**

மரக்கறி, உருளைக் கிழங்கு, பழவகை முதலிய செடிகளில் உண்டாகும் எரிவந்தம், புள்ளி விழுதல், பூஞ்சண நோய் ஆகியவற்றிற்கு உபயோகிக்க மிகச் சிறந்தது.

**பெர்பார் 50**

நெற்பயிர், காய்கறிச் செடிகள், பழ மரங்கள் முதலியவற்றை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த கிருமி நாசினி.

பயிர்ஆரோக்கியத்துக்குப் பக்கத்துணை பவர்ஸ் விவசாய ரசாயனப் பொருட்களே.

விபரங்களுககு எழுதுக:

**ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்**

விவசாய சேவை,
த. பெ. 11, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கம்போடியாவில்

# அமெரிக்க - தென் வியட்னும் படைகள் ஆறு முனைகளில் புதிய தாக்குதலை ஆரம்பித்தன

## 50 யு. எஸ். சண்டைக்கப்பல்கள்

### உதவிக்கு வந்துள்ளன

**சைகோன், மே 7**

**கம்போடியாவில் கம்யூனிஸ்ட் துருப்புகளுக்கெதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்க தென் வியட்னும் படைகளுக்கு ஆதரவாக சுமார் 50 அமெரிக்கப் போர்க் கப்பல்கள் வந்து சேர்ந்துள்ளன.**

கம்போடிய எல்லைப் பிரதேசத்தில் வியட்காங்கியரை எதிர்த்து அமெரிக்கா தென் வியட்னும் கூட்டுப்படையினர் ஆறு முனைகளில் கடுமையான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள் ஒரு முனையில் வியட்காங்கியரின் கடுமையான தாக்குதல் ஒன்றினை அமெரிக்க-தென் வியட்னும் படையினர் எதிர் நோக்கியிருக்க நேர்ந்துள்ளது.

இந்தோ சீன நிலைமை குறித்து ஆலோசிப்பதற்கு சர்வதேச மாநாடொன்றை நடத்தலாமென்று ஐ. நா. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ள ஆலோசனையை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ரோஜர்ஸ் வரவேற்றிருக்கிறுர். யுதாண்டின் யோசனைக்கு உலக நாடுகளில் எங்ஙனம் ஆதரவு கிடைக்கிறது என்பதை அமெரிக்கா உற்றுக் கவனித்துவரும் என்றும் திரு. ரோஜர்ஸ் குறிப்பிட்டார்.

**மூவாயிரம் கம்யூனிஸ்டுகள்**

சர்வதேச மாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்ற யுதாண்டின் யோசனையைக் கனடாவும் வரவேற்றிருக்கின்றது. இந்தோ சீன பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வு ஏற்படுவதின் மூலம்தான் அங்கு அமைதியை ஏற்படுத்த முடியுமென்று பிரெஞ்சு அதிபர் திரு. பொம்பிடோ கருத்து வெளியிட்டிருக்கிறுர்.

**மாணவர் குழப்பம் நீடிக்கின்றது**

கம்போடியாவில் அமெரிக்க ராணுவம் தலையிட்டதை ஆட்சேபித்து தொடர்ந்தும் அமெரிக்க பல்கலைக் கழகங்கள் பலவற்றில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. கெண்டங்கி பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட கலவரமொன்றில் அதிகாரிகள் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினர். பல பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன. ஒஹியோ பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட கலவரங்களில் நான்கு மாணவர்கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தும்படி அதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிறுர்.

## "மலையக மக்களுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுத்தோம்"

### — வி. தர்மலிங்கம்

**தாவடி, வியா.**

தமிழரசுக் கட்சியினுல் தான் தமிழ்மக்களின் குரல் ஆட்சிமன்றத்திலேயும் சரி, வெளியேயும்சரி ஒலிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ்மக்களில் அக்கறையாக இருந்தபடியால்தான், 1956-ல் சிங்களச் சட்டம் வருவதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்களுக்கு நேரவிருந்த கஷ்டங்களை திரு. செல்வநாயகம் கூறியிருந்தார் 1947-ம் ஆண்டிலேயே தனிச்சிங்களச் சட்டத்துக்கு அத்திவாரம் போடப்பட்டது என்பதை யாவரும் அறிவர்.'

இவ்வாறு சுதுமலை வடக்கில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துரையாற்றுகையில் முன்னுள் உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறினர்.

வாக்குரிமை என்பன பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு ச. முத்துலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்களுடைய வருங்காலத்தைப்பற்றி எந்தவொரு அரசியல் கட்சியும் அக்கறை காட்டாத அளவுக்கு தமிழரசுக்கட்சி அக்கறை காட்டியது. தமிழ் மக்கள் ஏதாவதொரு சிறிய உரிமைகளையாவது பெற்று தன்மானத்துடன் வாழலாம் என்ற பெருநோக்குடன்தான் மாவட்டசபையை விரும்பியது. 1964-ம் ஆண்டிலே செனட்டராகவிருந்த காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளை கூட மாவட்ட சபைசிறந்ததென்று கூறிஞர் அதே ஆண்டு வரவுசெலவுத்

## "வல்வெட்டித்துறையில் சேலைவாங்கி கண்டியில் விற்றேம்"

### பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, வியா

'நானும், 2-வது எதிரியும் வல்வெட்டித்துறையில் சேலைகள் வாங்கி கண்டியில் கொண்டு சென்றுவிற்றேம். கண்டியில் முஸ்லிம் ஹோட்டலில் தங்கினேம். அங்கு தங்கிய நாட்களில் உள்ள செலவுகளை 2-வது எதிரியே பொறுத்தார், சேலை வாங்குவதற்காக 2-வது எதிரி கொண்டுவந்த சங்கிலியை நெல்லியடியிலுள்ள வேலாயுதம் என்பவரிடம் கொடுத்து ரூ. 100 2-வது எதிரிக்கு வாங்கிக் கொடுத்தேன். கண்டியிலிருந்து வந்து வேலாயுதத்திடம் வாங்கிய கடனைக் கொடுத்து அவரிடமிருந்து சங்கிலியை வாங்கி 2-வது எதிரியிடமே கொடுத்தேன்'.

இவ்வாறு நெல்லியடியை சேர்ந்த விவசாயியான கே. செல்வராசா என்பவர் பருத்தித்துறை நகை வியாபாரி கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினர். பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் வழக்கு விசாரிககப்பட்டது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் 68-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3-ந் திகதி பருத்தித்துறை நகைவியாபாரியான திரு. எம். எம். சுல்தான் மொகிதீன் என்பவரை சதிசெய்து கொலை செய்ததாக கொழும்பு இரகசியப் பொலிசாரால் குற்றம்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டது.

நா. திரவியம் என்பவர்

றும் மு. வேலாயுதம் ஆகியோர் சாட்சியமளித்த பின் மேல்விசாரணை இம்மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 29 சோடிகளுக்கு சிக்கன திருமணம்

சென்னை, மே 7

சென்னையில் 29 சோடிகளுக்கு சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. இதனை அமைச்சர் என். வி. நடராசன் நடாத்தி வைத்தார்.

சென்னை சேத்துப்பட்டு மங்களபுரத்தில் உள்ள சிக்கன திருமண சங்கம் ஆண்டு தோறும் சிக்கன முறையில் திருமணம் நடத்தி வைக்கின்றது. இந்த வருடம் மாநகராட்சி உறுப்பினர் கா. முருகேசன் தலைமையில் நடந்த இத்திருமண வைபவத்தில் அமைச்சர் என். வி. நடராசன் கலந்துகொண்டு திருமணங்களை நடத்திவைத்தார்.

அமைச்சர் முத்துசாமி மணமக்களுக்குப் புத்தாடை வழங்கி வாழ்த்திஞர். மற்றும் பி. ஆசைத்தம்பி, மேயர் பாலசுந்தரம் ஆகியோரும் வாழ்த்திப் பேசினர்.

## 21 அடி மலைப்பாம்பு

மணிலா, மே 7

21 அடி நீளமான மலைப்பாம்பு டாக்ஸியால் மோதிக் கொலை செய்யப்பட்டது. பிலிப்பைனின் நாட்டிலுள்ள

## "தேசிய ரீதியில் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும்"

### சிவனேசன் விளக்கம்



உடுவில் வியாழன்

''தமிழ்மக்களுடைய பிரச்சனை இந்நாட்டில் நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டுமானுல் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை இனத்தின் பூரண ஆதரவுடனே தான் தீர்க்க முடியும் அதற்கு மாருக போராட்டங்கள் மூலம் நாம் பிரச்னைகளை தீர்க்க முய்ன்ருல் அது ஒரு நிரந்தரமற்ற தற்காலிக தீர்வாகவேயிருக்கும். எமது பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானுல் அது தேசியரீதியில் தீர்க்கப்பட வேண்டும். தமிழரசுக்கட்சி சிறுபான்மை இனப்பிரச்னையை தேசிய ரீதியில் அணுகாது வகுப்புவாத அடிப்படையில் தமிழர் பிரச்னை என கூறித்தீர்க்க முயன்றதால் தான் கடந்த 20 ஆண்டுகளாக இப்பிரச்னை தீர்க்கப்படாமலிருக்கின்றது''

'தமிழரின் இன்றையநிலையும் எதிர்காலமும்' என்ற விடயம் பற்றி சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில் நூல் நிலையக்குழு நடாத்திவரும் கருத்தரங்கில் பேசிய உடுவில் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு என். சிவநேசன் மேற்கண்டவாறு கூறினர்.

பட்டினசபை விளையாட்டரங்கில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. சிதம்பரநாதன் தலைமைவகித்தார். திரு. என். சிவநேசன் தொடர்ந்து பேசியதாவது:-

சிறுபான்மையோர் பிரச்னை இலங்கைக்கு மட்டும் சொந்தமானதல்ல. இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் இப்பிரச்னை உண்டு இது ஓர் உலகப் பிரச்னை இப்பிரச்னைகளை சிறுபான்மையினங்கள் இரண்டுவழிகளில் தீர்த்துக் கொள்கின்றன. சிறுபான்மையினத்தில் சிலர் தமக்கென ஒருகட்சியை ஆக்கிக்கொள்ளாமல் தேசிய கட்சிகளுடன் சேர்ந்து நின்று தம்பிரச்னைகளை தீர்த்துக் கொள்கின்றன. மற்றோர் இனம் சிறுபான்மையினத்திற்கென தனியொருகட்சியை ஏற்படுத்தி பிரச்னைகளைத் தீர்க்க முயல்கின்றன. இலங்கையில் தமிழர் பிரச்னை தேசிய ரீதியில் தான் தீர்க்கப்பட வேண்டுமென்பது பெரும்பான்மை சிங்களக்கட்சிகளின் ஏகோபித்த முடிவு.

'வகுப்பு வாதம் சிறுபான்மையினத்தவரையே பெரிதும் பாதிக்கும் என்பதை கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி மேற்கொண்ட பாதயாத்திரை ஸ்ரீஎதிர்ப்பு இயக்கம் போன்ற பலாத்கார நடவடிக்கைகள் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளன என்ருர்.

## பிரான்ஸ் இலங்கை வைத்தியவாரம்

கோட்டை, வியா

நேற்று தொடக்கம் 11 ம் திகதிவரை பிரான்ஸ் இலங்கை வைத்திய வாரம் கொண்டாடப்படுகிறது.

இப்பிரான்ஸ்- இலங்கை வைத்திய வாரத்தையொட்டி ஆறு பிரான்ஸ் வைத்தியப் பேராசிரியர்கள் பேராதனை கொழும்பு ஆகிய இரு பல்கலைக்கழகங்களினதும் வைத்தியப் பகுதிகளில் சொற்பொழிவாற்றுவார்கள்.

நீங்கள் வீடு கட்டும் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு கிடைக்கிறது என்பதை அமெரிக்கா உற்றுக் கவனித்து வரும் என்ம் திரு. ரோஜர்ஸ் குறிப்பிட்டார்.

## மூவாயிரம் கம்யூனிஸ்டுகள் பலி

கம்போடியாவில் அமெரிக்க-தென் வியட்னும் படைகள மேற்கொண்டுள்ள தாக்குதல்களின் காரணமாக இதுவரையில் சுமார் மூவாயிரம் கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இச்சண்டைகளில் தென் வியட்னுமியர் 172 பேரும் அமெரிக்கர் 24 பேரும் பலியானதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

## அரபுக்கள் மறுப்பு

கெய்ரோ, மே 7

ஐக்கிய அரபுக் குடியரசின் ராணுவப் பணிகளுக்கு சோவியத விமான ஓட்டிகள் உதவிபுரிவதாக இஸ்ரேலியர் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகளை ஐக்கிய அரபுக் குடியரசு உத்தியோக பூர்வமாக மறுத்திருக்கின்றது.

இஸ்ரேலியரின் குற்றச்சாட்டை சோவியத் யூனியனும் ஏற்கனவே மறுத்திருக்கின்றது.

## 'தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்'

தாவடி, வியாழன்

ஏழைத் தமிழ் மக்களின் பிள்ளைகள் கல்விபயின்று முன்னேற்றமடைய தமிழ் மக்களுடைய கலாசாரத்துக்கேற்ப யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழகம் அமைய வேண்டுமெனஎமது தமிழ்க் காங்கிரஸ் கட்சி விரும்புகின்றது.'

இவ்வாறு தாவடி சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கிளை நிலையத்திலே தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பணிமனைத் திறப்பு விழாவின் போது கலந்துரையாற்றிய உடுவில் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு ந. சிவனேசன் கூறினார்.

திரு. இ சண்முகலிங்கத்தின் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்:

'யாழ்ப்பாணத் தமிழ் மககளுடைய பிள்ளைகள் பெற்ருேரின் கீழ்ப்படிவாக சுலபமான முறையிலே அதிக செலவு செய்யாமல் படித்துப் பட்டதாரிகளாக வடக்கே பல்கலைக்கழகம் அமைவது சாலப் பொருந்தும். இதற்காக நாம் பாடுபடுவோம். எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதாக அமையப் போகின்றது' என்ருர்.

யாவரும் அறிவர்.'

இவ்வாறு சுதுமலை வடக்கில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துரையாற்றுகையில் முன்னுள் உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறினுர்

திரு. எஸ். சிவஞானத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசும்போது திரு. தர்மலிங்கம் கூறியதாவது:

மலைநாட்டுத் தமிழ்மக்களுடைய பிரச்னைகளிலெல்லாம் பங்கு கொண்டு முன்னின்று உழைத்து குறைந்தது மூன்றேகால் லட்சம் மக்களுக்காவது குடியுரிமை,

டன்தான் மாவட்டசபையை விரும்பியது. 1964-ம் ஆண்டிலே செனட்டராகவிருந்த காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளைகூட மாவட்ட சபைசிறந்ததென்று கூறினுர் அதே ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்கு நன்றியுரை கூறும்போது முன்னுள் உடுப்பிட்டி எம். பி.யும் மாவட்ட சபை சிறந்ததென்று வரவேற்ருர்.

மானிப்பாய்கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு, திரு. செ. பத்மநாதன், திரு. முத்துக்குமாரசாமி உட்படப் பலர் உரையாற்றினர்.

னே என்பவரை சதி செய்து கொலை செய்ததாக கொழும்பு இரகசியப் பொலிசாரால் குற்றம்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டது.

நா. திரவியம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

பருத்தித்துறை முஸ்லிம் நகைவியாபாரி கொலை செய்யப்பட்டது அறிந்தேன். 2-வது எதிரியை எனக்குத் தெரியும். சம்பவத்திற்குப் பிறகும் சந்தித்திருக்கிறேன்.

வவனியா அரசாங்க ஆஸ்பத்திரி தொழிலாளியான பசுபதி முருகுப்பிள்ளை மற்

## ஜி. ஜி. சொல்கிருர்:

# "அன்று சொன்னதை தமிழரசார் இன்று ஏற்றுக்கொள்கின்றனர்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழன் சிங்கள மக்களுடன் ஒற்றுமைப்பட்டு நின்ருல் தான் உரிமைபெற முடியுமென்று 1948ம் ஆண்டு சொன்னேன். இதை இனறு தான் தமிழரசார் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள்."

இவ்வாறு தமிழ்க் காங் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன் தினம் குருநகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறினார்



திரு. அன்ரனி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பாஷை ஒரு சின்னம். அது இரண்டு மாகாணத்தில் இருந்தால்போதாது. எல்லா மாகாணத்திலும், பெண்களும், ஆண்களும் சமமாகப் பேசவேண்டும் என்று நாம் கூறுகிருேம் தமிழர்கள் எங்கே வாழ்கிருர்களோ அங்கே தமிழ் பேசப்படவேண்டும். சிங்களவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றே நாம் உரிமையைப் பெற முடியும். எனது இந்த இரு விஷயங்களையும் இன்று தமிழரசார் ஏற்றுக்கொண்டமைக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். கிழக்குமாகாணத்தில் நாம் தமிழரசுக் கட்சியுடன்போட்டியிட்டால் அங்கு வெல்வது ஸ்ரீ லங்கா போன்ற ஒரு சிங்களக்கட்சியாகவே இருக்கும். அதுவும் இதற்கு ஒரு காரணமாகும்.'

திரு. எஸ். ஸ்ரனிஸ்லொஸ் பேசுகையில், "தமிழ்க்கட்சிகளில் ஒன்ருன தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே மீன்பிடி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலட்டைத் தொழிலாளரை முதலாளிகளின் கையிலிருந்து விடுவித்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏகபோக உரிமையளித்தது. கள்ளக் கடத்தலைச் சாட்டித்தடுத்து வைக்கப்பட்ட 20 குதிரை வேக வெளியிணைப்பு இயந்திரங்களை மீண்டும் இறக்குமதிசெய்தது. சங்கு ஏற்றுமதியை கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைத்தது. இவை யாவும் காங்கிரஸ் கட்சியினுலேயே செய்யப்பட்டது" என்று கூறினுர்.

திரு. ஏ. அன்ரனி தலைமை வகித்துப் பேசுகையில் "சத்தியாக்கிரக காலத்தில் தமிழ் மக்கள், சாதி, சமய, கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட்டு செயல்பட்டோம். அந்தப் போராட்டத்தில் தமிழரசார் பின்வாங்கியபோதிலும் திரு. சிவசிதம்பரம், வீரத்துடன் நின்று செயற்பட்டதை நாம் மறக்க முடியாது. அவர் தமிழ்ப் பெண்களின் மானத்தைக் காத்தார். தேர்தலில் சாதி சமய வேறுபாட்டைப் பார்க்கக்கூடாது. குருநகர் மக்களுக்கு திரு. பொன்னம்பலம் செய்த சேவையை நாம் மறந்துவிடக்கூடாது" என்ருர்.

திரு. மோதிலால் நேரு பேசுகையில் "வடபகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவேண்டும் என எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்க, தமிழரசுக்கட்சி அதைப் பற்றி ஒன்றுமேகூறவில்லை. படித்த வாலிபர்கள் வேலையற்றிருக்கிருர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்" என்ருர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சாமிநாதர், திரு. செல்வநாயகம் ஜே. பி, டாக்டர் போல்ராஜ் ஆகியோருடன் மற்றும் பலர் பேசினார்.

## மின்தறி நெசவாலைத் திறப்புவிழா

சங்கானை, வெள்ளி

பண்டத்தரிப்பு கோவிற்பற்று பலநோக்குக் 'கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மின்தறி நெசவாலைத் திறப்புவிழா நாளை மாலை 5 மணிக்கு சமாசத் தலைவர் திரு. மு. வைரமுத்து தலைமையில் நடைபெறும். நெசவாளர் செல்வி எஸ். செல்வநாயம் நெசவாலையைத் திறந்து வைப்பார். பிரதம விருந்தினராக கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. டபிள்யு. பத்திராஜ கலந்துகொள்ளும் வைபவத்தில் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இராசரத்தினம், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு வி. கனகசபை, திரு. ரி. கே. இராஜசேகரம் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர். கலைநிகழ்ச்சிகளுடன் பண்டத்தரிப்பு சமாஜ மின்தறி ஆலைப்பணியாளர் தயாரித்தளிக்கும் "சத்திய சோதனை" என்னும் நாடகம் இடம்பெறும்.

## மலைப்பாம்பு

மணிலா, மே 7

21 அடி நீளமான மலைப்பாம்பு டாக்ஸியால் மோதிக் கொலை செய்யப்பட்டது. பிலிப்பையின் நாட்டிலுள்ள லெகாஸ்டி நகரச்சாலை ஒன்றில் இது நடைபெற்றுள்ளது.

மலைப்பாம்பு ஒன்று வீதியில் ஊர்ந்து சென்று கொண்டிருந்ததைக் கண்ட டாக்ஸி சாரதி அதன்மீது டாக்ஸியை ஏற்றினுர். அப்போது வண்டிச் சில்லுக்குள் மலைப்பாம்பு சிக்கிக் கொண்டது. உடனடியாகச் சாரதி தரையில் இறங்கி அருகில் இருந்த பெரிய கல்லொன்றை எடுத்து பாம்பைக் கொன்ருர்.

இம்மலைப்பாம்பு இருபத்தொன்று அடி நீளமும், 60 கிலோகிருாம் எடையும் 10 அங்குல சுற்றளவும் கொண்டது.

—

தாய்நாட்டைக் காக்க

## 'ஐ.தே.கட்சியை தெரிவு செய்யுகங்ள்'

அனுராதபுரம், வியா

'1965ம் ஆண்டு பத்திரிகைச் சுதந்திரத்தை அழித்து நாட்டில் சர்வாதிகாரஆட்சியைக்கொண்டுவர கூட்டணி முனைந்த வேளையில் மக்கள் பத்திரிகைகளையும் தங்களையும் காப்பாற்றிக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியைத் தெரிவு செய்தனர். தற்போது பொருளாதாரத் துறையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கண்கூடாகக் கண்ட மக்கள் திரும்பவும் ஐக்கிய தேசியக் கட்சியையே தங்கள் தாய்நாட்டைக் காப்பாற்றத் தெரிவு செய்யவேண்டும்'.

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அனுராதபுரம் ஐ.தே.கட்சி வேட்பாளர் திரு கே.டி.எம்.சி. பண்டார மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயல் படுத்தியும் வருகிறது 1956-65க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கூட்டணி ஆட்சிக்கு வந்ததால் இத் திட்டங்கள் செயல் படுவதில் தாமதம் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டார்.

திரு சுகததாசா- தனுவத்தை, திரு பேர்ஸி-அனுராதா. திரு தர்மதாசா ஜயசேகரா உட்படப் பலர் உரையாற்றினர்.


# நீங்கள் வீடு கட்டும் பொழுது ஒட்டுப் பலகை கதவுகளை பாவித்து

விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப்பலகை கதவுகள் பாரம் குறைந்தவை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புலபக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. இரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளுக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 22903.

THUNDERP

மணிவாக்கு
காலந் தவறி கிடைத்த நீதி நீதியாகாது. இன்றைய கிராமங்களின் அவசர உணர்ச்சியோடு நாம் பணியாற்றவேண்டும். —விஞேபாபாவே.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 25-ந் திகதி (8 - 5 - 70)

## தேர்தலும் அரசியல் அமைப்பும்

தேர்தல் முடிந்து கூட்டணி ஆட்சிபீடத்துக்கு வந்ததும் மக்கள்பிரதிநிதிகள் சபையை அரசியல் நிர்ணயசபையாகக் கருதி புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் என்று திருமதி சிறிமா தலைமையிலுள்ள கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

0 திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இப்போதைய அரசியல் அமைப்பைத் திருத்தியமைப்பதுதங்கள் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

0 அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த ஒரு பிரஜைக்கும்இன மத, மொழி சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படாமலிருப்பதற்காகவும்எல்லோருக்கும் எல்லாவற்றிலும் சம உரிமை கிடைப்பதற்காகவும் அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் ஒன்று சேர்க்கப்படுவதற்குத் தமிழ்க் காங்கிரஸ் உழைக்குமென்று கூறப்பட்டுள்ளது.

0 இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதே தங்கள் இலட்சியம்என்பதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இம்முறையும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியிருக்கிறது.

0 திரு ஸி. சுந்தரலிங்கத்தின் தலைமையிலுள்ள ஈழத் தமிழ் இன சுதந்திர முன்னணி விடுத்துள்ள கொள்கை அறிக்கையில் பரம்பரை ஈழத்தமிழ் ஆட்சி நிலத்தைப் பாதுகாத்துஈழத் தமிழ் இனத் தனிஅரசு மறுபடியும் உருவாகநடவடிக்கைகள் எடுப்பதென்று கூறப்பட்டுளளது.

0 திரு வி. நவரத்தினத்

றைய அரசியல் அமைப்பு நமது நாட்டுக்குப் பொருத்தமற்றதென்பதை ஒப்புக்கொண்டுள்ளனவென்பது தெளிவு

இன்றைய அரசியல் அமைப்பில் திருத்தம் செய்துஇலங்கையைஒரு குடியரசுநாடாக்க வேண்டுமென்றும் இதற்கான சிபார்சுகளை செய்வதற்காக ஆட்சி மன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுக்கள் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயகா காலத்திலிருந்து திரு டட்லி சேனநாயகாவின் தேசீய அரசாங்கம் ஆட்சியிலிருந்த காலம் வரை நியமிக்கப்பட்டும் இன்றுவரை எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை.

கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகால அனுபவங்களிலிருந்து நமது நாட்டின்முன்னேற்றத்துக்கு இப்போதைய அரசியல் அமைப்பு முறையே காரணமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர் இதேமுறை நீடித்தால் நமது நாட்டின் ஜனநாயக வாழ்க்கை முறைக்கே ஆபத்தும் நேரிடலாம்

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது அங்கு அரசியல் நிர்ணய சபையொன்றைக் கூட்டி அந்த நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்பின் அதில் பல தடவைகள் திருத்தமும் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் மட்டுமல்ல இதர பல நாடுகளிலும் இதுபோன்று நடைபெற்றுள்ளன. பாகிஸ்தான் ஜனநாயக வாழ்க்கை முறை தோல்வியடைந்து பத்துவருட சர்வாதிகார ஆட்சியின் பின்னர் மீண்டும் ஜனநாயக வாழ்க்கை முறையைக் கொண்டுவருவதற்காக இவ் வருடம் ஒக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத் தேர்தல் முடிந்ததும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 120 தினங்களுக்குள் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை

# தொகுதிக்கு என்ன செய்தேன் ?

# வாசகர் கேள்விக்கு ஜி.ஜி.பதில்சொல்கிருர்

'யாழ்ப்பாணத் தொகுதியைப் பொறுத்த வரையில் தாங்கள் பலவிதத்திலும் சேவையாற்றியிருக்கிறீர்கள்; தேவையானவற்றை மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்; ஆயினும் 'ஈழநாடு'க்கு அளித்த பேட்டியில், அவைகளை எல்லாம் குறிப்பிடாமல் விட்டுவிட்டீர்களே! உங்கள்மீது பற்றும், அன்பும்வைத்திருக்கும் என்போன்றவர்களுக்கு இதுமிகவும் மனக்கவலையை அளித்திருக்கிறது. ஆகையால் கடந்த காலத்தில்நீங்கள் தொகுதிக்கு மேலும் செய்தவைகளை தெரிவிக்குமாறு வேண்டுகிருேம்.'

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், முன்னுள் யாழ்ப்பாணம் எம். பி. யுமான திரு. ஜி ஜி. பொன்னம்பலத்தை இப்படியாகக் கேட்டு யாழ்ப்பாணம் நாமகள் வீதியைச்சேர்ந்த எஸ். சுப்பிரமணியம் எழுதிய கடிதத்தை அவரிடம் சமர்ப்பித்தோம்.

கடிதத்தை பார்த்துவிட்டு திரு. ஜி. ஜி. சிரித்துக் கொண்டே சொன்ஞர்:

'இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் இனத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதையே என்முக்கியமானலட்சியமாகக் கொண்டிருந்த போதிலும், என் தொகுதியைச் சகல விதத்திலும் வளம்பெற்றதாகச் செய்வதில் என்றும்பின் நின்றதில்லை' எத்தனையோவற்றை செய்திருக்கிறேன். அவற்றையெல்லாம் ஒவ்வொன்ருகச் சொல்லிக்கொண்டிருப்பதா என்றுவிட்டுவிட்டேன். வற்புறுத்திக் கேட்கிருர்களே! அதனுல் என்காலத்தில் செய்ததைச் சொல்கிறேனே!'

இப்படிக்கூறிய திரு.ஜி.ஜி. தொடர்ந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கொட்டடியில் அமைக்கப்படவிருக்கும் மின்தறிநிலையம் எமது இளஞ்சந்ததியினரின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க வழிகாட்டும்.

### உணவுக்கப்பல்கள் யாழ். வந்தன

கடந்தகாலத்தில் யாழ்ப்பாணப்பகுதிக்கு உணவுக்கப்பல்கள் வந்ததில்லை. நான் தலையிட்டு வடக்கே யாழ்ப்பாணத்துறைக்கும், காங்கேசன்துறைக்கும் கப்பல்கள்

விலைக்குப்பெற வசதிசெய்ததும் தெரிந்ததே.

### வீடமைப்புக்கு லட்சம் ரூபாய்

சொந்த வீடில்லாதவர்களுக்குஏற்படுத்தப்பட்டவீடமைப்புத்திட்டத்துக்கு அரசாங்கத்தை கொண்டு லட்சம்ரூபாஒதுக்கச்செய்தேன். திட்டி. நரிக்குண்டு, பாஷையூர் ஆகிய இடங்களுக்குஇத் திட்டம் உதவியளிக்கிறது.

சுண்டிக்குழியில் நெசவு நிலையம், தச்சுவேலைப் பயிற்சிப்பாட்சாலை, கட்டடப் பயிற்சிப் பாடசாலை, ஆகியன போன்றவற்றை உருவாக்கினேன்.

றக்கா ரோட்டிலுள்ளநரிக்குண்டு வீடமைப்புத் திட்டத்துக்கு 33 ஆயிரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு தமிழ்வித்தியாலய கட்டட வேலைகளுக்கென ரூ.5000மும் மலசலகூடங்களுக்கென ரூ 1000மும் பராமரிப்புக்கென ரூ.1000மும் ஒதுக்கப்பட்டன. ரூ. 5000 பாடசாலைப்பிள்ளைகளின் விளையாட்டுத்திடலுக்கும், ரூ. 5000 வெளிவிளையாட்டுப் பிள்ளைகளின் விளையாட்டுத்திடலுக்கும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தந்துள்ளேன்.

கொழும்புத்துறைதொழிற் பயிற்சிப்பாடசாலை ஒன்றை ஜெர்மன் உதவியுடன்நிறுவ எல்லாஏற்பாட்டையும்செய்தேன். அப்போது அமைச்சராகவிருந்த திருச்செல்வம் தடைக்கல்லாக இருந்தார், பின்போடப்பட்டு விட்டது.

யாழ்ப்பாண புகையிரத கடவைப் பாலத்தைஅமைத்துத்தரவேண்டுமென அமைச்சர் ஹுருலேயிடம்வேண்டினேன். இதற்கென 1லட்சத்து 25ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருககிறது.

யாழ். சேனியர்வீதி ஆங்கிலப்பாடசாலை, புனித யோன் பொஸ்கோ பாடசாலை, சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு பணம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றேன்.

குருநகர் மக்களுக்கு வீடு கொடுத்த காணியில் வீடுகள் அமைக்க அரசாங்கமே பொருள் வழங்கக்கூடிய ஏற்பாட்டையும் நான் செய்தேன். அவ்வீடுகள் அவரவர் பணவசதிக்கேற்றபடி கட்டுவதற்கு அரசாங்கம் அச்செலவுப்பணத்தைக் கடனுக உதவும். றெக்ளமேசன் விளையாட்டுத் திடலில் எஞ்சியிருந்த மூன்றரை ஏக்கர் நிலத்தில் அரசாங்கம் அரசாங்க இலாகாக்களை நிறுவ தீர்மானித்திருந்தது. குருநகர் மக்களின் வீட்டுத் தேவையை உணர்ந்து நான் அரசாங்கத்துடன் வாதாடி அந்நிலத்தை வீடமைப்புத் திட்டத்துக்கென ஒதுக்கச் செய்தேன் அதி விரைவில் குருநகரைச் சேர்ந்த மேலும் 60 குடும்பத்தினர் இந்நிலத்தை வீடமைப்புத் திட்டத்துக்குப் பெற இருக்கிருர்கள். இதனைப் பங்கிட்டு வழங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

புயலால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு உதவும் முகமாக அரசாங்கத்துடன் நான் பேசியதன் காரணமாக தொழிலாளர் குடும்பங்களுக்கு உதவி நிதி கிடைத்தது.

### குருநகருக்கு செய்த உதவி

குருநகர் மக்களுக்கு ''கோட்ஸ்'' தபாற்கந்தோர் என்ற பெயரில் ஓர் உபதபாற்கந்தோர் விரைவில் திறக்கப்படவுள்ளது.

குருநகர் பிரசவ விடுதியில் ஒரு வாரத்துக்கு ஒரு முறை மட்டுமே கர்ப்பிணிகள் பரிசோதிக்கப்பட்டனர். இப்பரிசோதனை நிறுத்தப்பட்டபோது யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரியுடன் வாதாடி வாரத்துக்கு ஒருமுறை கர்ப்பிணிகளைப் பரிசோதிக்க வழி செய்தேன். இப்பிரசவ விடுதியைச் சுற்றி மதில்கட்ட 15,000ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுத்ததன் பேரில் தற்போது மதில் கட்



யாழ்ப்பணத் தொகுதியில் அமைக்கப்படவிருந்த ஏழு நெசவு நிலையங்களிலொன்றை இஸ்லாமிய மக்களின்தேவையை உணர்ந்து ஒரு நெசவு நிலையத்தை அவர்களுக்கு ஆககிக் கொடுத்தார்.

### நாவாந்துறைக்கு

நாவந்துறையில் இதுவரை காலமும் தபாற்கந்தோர் இல்லாக்குறையைத் தீர்த்து வைத்தேன் நாவலர் வீதியில் ரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு முன்பாக புதிய உபதபாற் கந்தோர் அமைத்து இப்பகுதி மக்கள் கஷ்டத்தைத் தீர்த்து வைத்தேன்.

நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை முன்னேற்றத்துக்கு உதவினேன். மூடப்பட்டிருந்த நாவாந்துறை மருத்துவமனையை மீண்டும் இயங்கச் செய்தேன்

நாவந்துறையில் அரசாங்கத்திடமிருந்து 15 ஆயிரம் ரூபாய் பெற்று விளையாட்டுத்திடல் அமைத்துக்கொடுத்தேன்.

குழந்தைகளைசிறந்தமுறையில் பராமரிப்பதற்கும் தாய்மார்களுக்கு வேலைவசதியளிப்பதற்கும் குழந்தைகளின் பராமரிப்பு நிலையமொன்றைப் பாஷையூர் புனித அந்தோனியார்வீதியில் அமைத்துக் கொடுக்கவழி செய்தேன்

பாஷையூரில் சிறகுவலைக்களவைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து ஆவன செய்வதற்கு ஆணைக் குழுவொன்றை யாழ்ப்பாணத்திக்கு அனுப்பச் செய்தேன்''

### தேர்தலன்று

## 'தமிழ் சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வு இல்லையாம்'

நல்லூர், வியாழன்

கடந்த 68-ம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு. 69-ம் ஆண்டு மே மாதம் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டபோதிலும் தமிழ் சிற்றூழியர்களுக்கு இதுவரை பதவி உயர்வு அளிக்கப்படவில்லையாம். அதே சமயம் சிங்கள மொழி மூலம் பரீட்சையில் தோற்றிய சிங்கள சிற்றூழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாம்.

தமிழ் சிற்றூழியர் எவருக்காவது பதவி உயர்வு வழங்கப்படாததையிட்டு அதிருப்தியடைந்துள்ள தமிழ் சிற்றூழியர்கள் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் எஸ். நடராசா ஆகியோரைச் சந்தித்து இப்பாரபட்சம் சம்பந்தமாகத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்ததுடன், பிரஸ்தாப பரீட்சை முடிவுகளை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க அவன செய்யுமாறும் காலக்கிரமத்தில் சொற்ப தமிழ் சிறு ஊழியர்களுக்காவது பதவி உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரும் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

## "தமிழரசுக்கு எதிர்ப்பு இன உணர்வுக் கெதிரான போட்டி"

— பண்டிதர் இரத்தினம்

அல்லைப்பிட்டி, வியாழன்

''தமிழ்பேசும் இனத்தின் பலம் இன்று தமிழரசுக் கட்சியின் கையிலிருக்கின்றது. தமிழரசுக் கட்சியை அழித்து ஒழித்து விட்டால் தமிழினம் சிதறி சின்ஞபின்னமாகிவிடும்'' என பண்டிதர் கா. பொ. இரத்தினம் வேலணை கிழக்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். திரு. நா. பொ. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டிதர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ்ப் பிரதேசத்தில் தமிழரசுக்கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்குமிடையே நடைபெறும் போட்டி தமிழ் இன விடுதலையுணர்வுக்கும் அடிமைத்தனத்துக்குமிடையே நடைபெறும் போட்டியாகும். தமிழரசுக்கட்சியின் சீரிய தலைமையின் கீழ் தமிழ் பேசும் மக்கள் 1956-ம் முதல் ஒன்றுபட்டு தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்ருர்கள். ஆனுல் எதிர்வரும் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் இலட்சிய வேட்கையைத் திசை திருப்பி சலுகைகள் உதவிகள் போன்ற வார்த்தைகளைக் காட்டிதமிழரசுக்கட்சியின் தலைமையிலிருந்துதமிழ் பேசும் மக்களைப் பிரித்து விடுவதற்கு சிங்களக்கட்சிகளும் அதற்கு உதவியாக தமிழ்க்கட்சிகளும் தீவிரமாக முயற்சிசெய்கின்றன.''

கரம்பனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய பண்டிதர் இரத்தினம் கூறியதாவது:

''தமிழ் பேசும் மக்கள் முன்னுள்ள இன்றைய பிரச்னை அவர்கள் தொடர்ந்து தனித்துவத்துடன் தமிழினமாக இந்நாட்டில் வாழ்வதா அல்லது சிங்களவர்களாக மாறுவதா என்பதுதான் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் இதற்கான விடையை தெளிவாககூறிவிடவேண்டும்.'

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தமிழ் பேசும் மக்களுக்கேயுரிய பிரதேசங்கள் என்பதை இருபெரும் சிங்களக்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் எழுத்து மூலம் ஒப்புக்கொள்ளும்படி வைத்த பெருமை இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கே உரியது.''

## "பொருளாதார - சமூக சமத்துவம் உரிமைக்கு வழிவகுக்கும்"

யாழ்ப்பாணம், வெள்ளி தேவையை மாட்டுவண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ள விடுத்துள்ள கொள்கை அறிக்கையில் பரம்பரை ஈழத்தமிழ் ஆட்சி நிலத்தைப் பாதுகாத்துஈழத் தமிழ் இனத் தனிஅரசு மறுபடியும் உருவாகநடவடிக்கைகள் எடுப்பதென்று கூறப் பட்டுள்ளது.

0 திரு வி. நவரத்தினத்தின் தலைமையிலுள்ள தமிழர் சுயாட்சிக் கழகத்தின் கொள்கையும் ஈழத்தில் தமிழருக்கென சுயாட்சி யொன்றை நிறுவுவதே யாம்.

இந்த அரசியல் ஸ்தாபனங்கள் தவிர டாக்டர் குணபால மலலசேகரா தலைமையிலுள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அதன் உபகுழு செய்துள்ள சிபார்சின் அடிப்படையில் சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையில் 'நாட்டுக்குப் பொருத்தமற்ற இன்றைய அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதை விடுத்து முற்றாக புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபை ஒன்றைக் கூட்டவேண்டும் என்று கேட்டுள்ளது

இவை யாவற்றிலுமிருந்து அரசியல் நிறுவனங்களும்சரி இலங்கையின் முக்கிய மத ஸ்தாபனங்களும்சரி இன்...றையைக் கொண்டுவருவதற்காக இவ் வருடம் ஒக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத் தேர்தல் முடிந்ததும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 120 தினங்களுக்குள் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் அதாவது முன்னைய அரசியல் அமைப்புத்தான் அங்கு ஜனநாயகம் தோல்வியடைவதற்கும்சர்வாதிகாரம்தோன்றுவதற்கும் மூலகாரணம்என்பதை பாகிஸ்தான் தலைவர்கள் உணர்ந்துள்ளனரென்றே சொல்ல வேண்டும். எனவே நமது நாட்டின் கடந்தகால அனுபவங்களையும் இதர நாடுகளின் அனுபவங்களையும் கொண்டு இந்தத் தேர்தல் முடிந்தபின்னர்எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் நன்மையையும் முன்னேற்றத்தையும் கருதி புதிய அரசியல் அமைப்பு ஒன்றை நமது நாட்டுக்கு பொருத்தமான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபையொன்றைக் கூட்டுவதற்கு முன்வரவேண்டியது அவசியம்.

அரசியல் அமைப்பு தேர்தல் பிரசாரத்துக்கு மட்டும் உரியதொரு கருவியல்ல.

## யாழ். வந்தன

கடந்தகாலத்தில் யாழ்ப்பாணப்பகுதிக்கு உணவுக்கப்பல்கள் வந்ததில்லை. நான் தலையிட்டு வடக்கே யாழ்ப்பாணத்துறைக்கும், காங்கேசன்துறைக்கும் கப்பல்கள் வரக்கூடியதாக ஒரு வாய்ப்பை ஏற்படுத்தினேன். இதனால் நமது பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்புப்பெற்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் 'லக்சல' 'சலுசல' ஸ்தாபனங்கள் நிறுவுவதற்கு வழிவகுத்தேன்.

யாழ். மத்திய கல்லூரியில் புதியகட்டிடங்களுக்குபணம் ஒதுக்கச்செய்தேன். இதே போன்று வேம்படி மகளிர் கல்லூரியும் உதவிபெறவழி வகுத்தேன்.

யாழ்ப்பாணத்தில் ஓட்டுப் பலகை விற்பனை நிலையம் நிறுவப்பட்டதும், ஓட்டுப் பலகைகளை கட்டுப்பாடான ...

...யாழ். சென்யோவ் ஆங்கிலப்பாடசாலை, புனித யோன் பொஸ்கோ பாடசாலை, சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு பணம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றேன்.

குருநகர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக வாதாடிப் பெற்றுக் ...

...வாரத்துக்கு ஒருமுறை காப்பிணிகளைப் பரிசோதிக்க வழி செய்தேன். இப்பிரசவ விடுதியைச் சுற்றி மதில்கட்ட 15,000ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுத்ததன் பேரில் தற்போது மதில் கட்டப்பட்டிருக்கிறது.

...வழிவகைகளை ஆராய்ந்து ஆவன செய்வதற்கு ஆணைக் குழுவொன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பச் செய்தேன்''

# தேர்தல் போட்டி- 1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி - 1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள மகாஜனக் கட்சி, இ. தி. மு. க. கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

### 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''

### 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

## தேர்தலன்று 44,000 பஸ்கள்

கோட்டை, வியா.

தேர்தல் தினமான மே மாதம் 27-ம் திகதியன்று 44,000 இ. போ. ச பஸ்கள் வாக்களிப்பவர்களுக்குத் திருப்திகரமான சேவையை யளிக்கவுள்ளன.

பஸ் சேவையில்லாத பின்தங்கிய இடங்களுக்கும் அன்றையதினம் பஸ் சேவை யளிக்கப்படவுள்ளது.

## கோட்டை முனீஸ்வரன் கோவில்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் கோட்டை முனியப்பர் கோவில்108அடிராஜ கோபுரம் என்றிருப்பது தவறு என்றும் ராஜ கோபுரம் எத்தனை அடிவரையும் அமையுமென்று திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாதென்றும் கோவிலின் அருகில் வாகன சாலையும், பூங்காவும் அமைக்கும் நோக்கமும் இல்லையென்றும் கோவிலதிபர் தெரிவிக்கிறார்.

## இந்து ஊழியர் கலாச்சார சங்க நிர்வாகிகள்

கோட்டை, வியா

கொழும்பு மாநகரசபை இந்து ஊழியர் கலாச்சாரச் சங்கத்தின் 3வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான உத்தியோகத்தர்களாகபின்வருவோர் தெரிவு செய்யப் பட்டார்கள்.

போஷகர்கள்- செனட்டர்.ரி.நீதிராசா, திரு. ஆர். மகேந்திரா, திருமதி எம். இரத்தினம்.

தலைவர் டாக்டர் சகாதேவா,

துணைந்தலைவர்கள் திருவாளர்கள் ஆர்.கனகராயர் ஆர். கதிரவேலு, ஆர்.இராசசிங்கம், எம்.நேசதுரை ஈ. மகேசன், சி. கந்தசாமி டாக்டர் எஸ் வேலுப்பிள்ளை எஸ். இராசசுந்தரம், பொதுக் காரியதரிசி திரு. கே.ஜெயகுலசிங்கம், துணைக் காரியதரிசி:- திரு.என். குமாரசாமி, துணைப்பொருளாளர் திரு. எஸ். பி. தருமராசா நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. எஸ். கணேஸ்வரன், கணக்குப் பரிசோதகர்கள்: திரு. ரி. விவேகானந்தராசா திரு. எஸ். வைத்திலிங்கம்

12பேர்அடங்கிய பொதுக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## "பொருளாதார - சமூக சமத்துவம் உரிமைக்கு வழிவகுக்கும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

நாம் எமது உரிமைக்காகப் போராடும் அதே நேரத்தில் எல்லா நசுக்கப்பட்ட மக்களின் பொதுவான பொருளாதார, சமூக சமத்துவத்திற்காகவும் போராடவேண்டும். இதனைப் புறக்கணித்த எந்த அரசியல் உரிமைப் போராட்டமும் வெற்றியளிக்கப்போவதில்லை. எந்தப் போராட்டமும் பொருளாதார சமூக சமத்துவத்தின் அடிப்படையிலேயே நடைபெறவேண்டும், இதுவே இன்றையகாலமும், சூழலும் எதிர்பார்க்கும் வழிமுறையாகும். இவ்வாறு ஊர்காவற்றுறையில் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகரான திரு. ப. கதிரவேலு புங்குடுதீவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும்தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

சர்வோதய அடிப்படையில் இணைந்து உரிமைக்காக போராடும்போது இன, மத, மொழி என்ற குறுகிய மனப்பான்மைக்குஅங்குஇடமில்லை.

எமது உரிமைப்போராட்டங்களும் விடுதலை இயக்கங்களும் வெற்றி பெறவேண்டுமானால் நாங்கள் எங்கள் காலத்துக்கும் சூழலுக்கும் தகுந்த முற்போக்கான வழிமுறைகளையும் போராட்ட முறைகளையும் கையாள வேண்டும். ஒருகாலத்தில் நாம் மாட்டுவண்டியில் பிரயாணம் செய்தோம். பின்னர் மோட்டார்வண்டியைப் பயன்படுத்தினோம். இன்று ஆகாய விமானத்திலும் பயணம் செய்கிறோம் ஆனால் அதற்காக மாட்டுவண்டி கூடாது என்பதல்ல அர்த்தம். ஒருகாலத்தின் தேவையை மாட்டுவண்டி மூலம்தான் பூர்த்திசெய்தோம். ஆனால் இன்றும் மாட்டுவண்டியில்தான் போகவேண்டும் எனக்கூறுவது தவறு. அதுபோல ஒரு காலத்தில் நமது கட்சிகள் கடைப்பிடித்த வழிமுறைகளும் போராட்ட முறைகளும் சரியானவையாக இருந்திருக்கலாம். ஆனால் எக்காலத்துக்கும் அவைகாட்டும் வழியே சரியென்று எண்ணுவது பேதமையாகும்.

மற்றும் எஸ். எம் செல்வராசா, ஜேம்ஸ் சந்திரசேகரம், சு. வில்வரத்தினம், அ. மாணிக்கராசா ஆகியோரும் உரையாற்றினர்.

## தேவாரப் போட்டி இவ்வாண்டும் நடத்த ஏற்பாடு

கோட்டை, வியாழன்

கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையினர் வழமைபோல்இவ்வாண்டும் ஈழத்துச் சிறுர்களுக்கிடையில் தேவாரப்பண்ணிசைப்போட்டியினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். எதிர் வரும் ஆகஸ்ட் 9-ம் திகதி இப்போட்டி நடைபெறும்.

நான்கு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் முதல் மூன்று பிரிவிலும் பாடசாலைச் சிறுர்களும் நான்காவது பிரிவில் வயதுக் கட்டுப்பாடெதுவுமின்றி எல்லோரும் பங்குபற்றக்கூடியதாயிருக்கும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலாவதாகவருபவர் தங்கப் பதக்கம் வழங்கிக்கௌரவிக்கப்படுவார். அடுத்துவரும் இருவருக்கு சிறப்புப்பரிசில்கள் வழங்கப்படுமாம். போட்டி விதிகளையும் தேவாரப்பாடல்களையும் 'சமயச் செயலாளர், கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை, 3கோவில் வீதி, கப்பித்தாவத்தை, கொழும்பு-10' என்ற முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம் என மேற்படி சபையின் சமயச் செயலாளர் திரு. வே. சுப்பிரமணியம் அறிவிக்கின்றார்.

## அறிவித்தல்

தேர்தல்பிரசாரக்கூட்டம் சம்பந்தமான அறிவித்தல்கள் செய்தியாகப் பிரசுரம் செய்ய முடியாதென்பதையும் விரும்புவோர் விளம்பரமாய் பிரசுரம் செய்யலாமென்பதையும் அறிவிக்கின்றோம்.

## இன்றைய பலன்

சித்திரை மீ 25-ம் வ

(8-5-70)

**மேஷம்;** செலவு, சிக்கல் நடுநிலைமை நன்று.

**ரிஷபம்:** தலையீடு, சோர்வு மௌனம் நன்று.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம், மகிழ்ச்சி.

**கடகம்:** சுகாதாரத்தை பேணு, அடக்கமாகஇருக்கவும்.

**சிம்மம்:** முயற்சி செய் முன்னேற்றம் உண்டு.

**கன்னி:** பிரிந்தவர் கூடுவர் வேற்றுமைகள் மறையும்.

**துலாம்:** ஆயுதபயம் அவதானம் வேண்டும்.

**விருச்சிகம்:** களஸ்திர வழியில் பொருள். புதிய நண்பர்கள் வருவர்.

**தனுசு:** முன்னேற்றத்தில் தடை பகைக்கவேண்டாம்.

**மகரம்-** இறைவழிபாடு. இதயத்தில் அமைதி முதியவர் ஆதரவு.

**கும்பம்.** உற்சாகம்புதிய தொழில்.

**மீனம்.** நல்ல திருப்பங்கள் அரசினர் ஆதரவு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை

## 85,000 பேர் விண்ணப்பம்

கோட்டை, வியாழன்

85,000 அரசாங்க ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடந்தபொதுத்தேர்தலின் போது 34,000 அரசாங்க ஊழியரே தபால்மூலம் வாக்களித்தனர். இலங்கை கடற்படை, இராணுவம், ஆகாயப்படை, பொலிஸ்படை யாகியவற்றைச் சேர்ந்தவர்களும் புகையிரத இலாகா, தபால் தந்தித்தொடர்பு இலாகாவைச் சேர்ந்தவர்களும் இலங்கைப்போக்குவரத்துச்சபை இலங்கைமத்திய வங்கி ஊழியர்களும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களும் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 8—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிசைந்தமிழ் 7-45சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, கள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம் 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்நிகழ்ச்சி

இரவு6-15வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45, நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03முஸ்லிம்நிகழ்ச்சி. 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

நல்லூர்

## பஜனைச் சபையின் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்பஜனைச்சபையினர் இம்மாதம் 1ம் திகதி பாதயாத்திரையாக நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் மறவன்புலோ கந்தசாமி கோவிலிலும், பூநகரி நரிக்கட்டுக் குளம் கந்தசாமி கோவிலிலும், செம்மன்குன்று விநாயகர் ஆலயத்திலும், பல்லவராயன் கட்டு பிள்ளையார்கோவிலிலும்முழங்காவில்பிள்ளையார்கோவிலிலும்வெள்ளாங்குளம்பிள்ளையார் கோவிலிலும் கட்டாடுவயல் கந்தசாமி கோவிலிலும் இலுப்பைக்கடவை அடியார்களாலும் பாப்பாமோட்டை அடிகளாலும் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்பட்டனர். 5ம் திகதி மாலை 6மணிக்கு திருக்கேதீச்சரம் சென்றடைந்து 6ம் திகதி விசேஷ அபிஷேகம் நடாத்தி திருக்கேதீச்சரதிருவாசக மடத்தினரால் வரவேற்கப்பட்டு பாதயாத்திரையை நிறைவேற்றினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org